செ.வெ.எண் :631 நாள்: 27.09.2021

**வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட பேரிடர் மேலாண்மை சார்பில் தீயணைப்பு துறையின் மூலம் நடைபெற்ற வடகிழக்கு பருவமழை -2021 குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.09.2021) தலைமையேற்று கூறியதாவது:-

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை இந்த மாதம் இறுதியில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையொட்டி முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் சார்பில் மேற்கொள்ள தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது. அதனடிப்படையில் மழை வெள்ளம் மற்றும் தீ விபத்து ஆகியவற்றில் சிக்கியவர்களை எப்படி மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டுவர வேண்டுமென மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு துறையினர் மூலம் செயல்முறை விளக்கம் அளித்து வருகின்றனர். எதிர்பாராதவிதமாக ஏற்படும் தீ விபத்துக்களை பல்வேறு வகைகளில் அணைப்பதற்கான செயல்முறை விளக்கமும் அளித்தனர். மேலும் ஆற்றில் விழுந்தவர்களை எப்படி மீட்க வேண்டும் எனவும் அப்படி மீட்கப்பட்டவர்கள் மயங்கி இருந்தால் அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை எந்த முறையில் அளிக்க வேண்டும் எனவும் தீயணைப்பு வீரர்கள் செயல்விளக்கம் அளித்தனர். மேலும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் காவல் கண்காணிப்பாளர் திருமதி பிரியா இந்த புணணி இ.கா.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) மரு.என்.ஓ.சுகபுத்ரா இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.ஸ்ரீகாந்த் இ.ஆ.ப., பயிற்சி ஆட்சியர் திரு.கௌசிக் இ.ஆ.ப., மாவட்ட தீயணைப்புத் துறை அலுவலர் திரு மனோ பிரசன்னா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரங்கராஜன், வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) திருமதி.ராஜேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**